DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS 207/2018**

| | | |
|---|---|---|
| Name | : | பேச்சியாத்தாள் Pw1 |
| Husband's Name | : | சின்னத்துரை என்ற கிருஷ்ணசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of March 2021.

**முதல் விசாரணை**

நான் வாதி. எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. பட்டா எண்.1796க்கான நில உரிமை விபர 10(1) பிரிவு கணினி நகல் வாசாஆ1. பட்டா எண்.374க்கான நில உரிமை விபர 10(1) பிரிவு கணினி நகல் வாசாஆ2. பட்டா எண்.3508க்கான நில உரிமை விபர 10(1) பிரிவு கணினி நகல் வாசாஆ3. பட்டா எண்.2199க்கான நில உரிமை விபர 10(1) பிரிவு கணினி நகல் வாசாஆ4. வாதியின் பிதா வெ.குருசாமித் தேவர் இறப்பு சான்று சார்பதிவாளர் சரக நகல் வாசாஆ5. வாதியின் தாயார் மூக்காத்தாள் இறப்பு சான்று சார்பதிவாளர் சரக நகல் வாசாஆ6. 24.04.2018ம் தேதி வாதி, 1ம் பிரதிவாதிக்கும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் சார்பதிவாளருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுகள் 4 உடன் வாசாஆ7.

வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர்களின் அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 3 எண்ணம் வாசாஆ8. 28.04.2018ம் தேதி 1ம் பிரதிவாதி வாதியின் அறிவிப்பை பெற்று கொள்ள மறுத்து திரும்ப வந்த அறிவிப்பு அஞ்சல் உறையுடன் வாசாஆ9. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(அறிவார்ந்த 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)